# கும்பகோணம் மண்டலம்
# திருத்துறைபூண்டி மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
# தில்லைவிளாகம் கிராமம்

## Contents


1. செயல்பாட்டு அறிக்கை....2
2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்....3
3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்....3
4. தொடக்க விழா அழைப்பிதழ்....4
5. தில்லைவிளாகம் கிராமத்தின் தொடக்கவிழா....5
6. மருத்துவ முகாம்....7
7. மனநல ஆலோசனை முகாம்....7
8. மரக்கன்று வழங்குதல் சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்....7
9. சர்வதேச யோகா தினம்....8
10. அனுபவ உரை....8
12. எதிர்காலத் திட்டங்கள்:....18
13. வாழ்த்து:....18

## 1. செயல்பாட்டு அறிக்கை

| S.No | Description | Information |
|---|---|---|
| 1. | கிராமத்தின் பெயர் | தில்லைவிளாகம் |
| 2. | கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள் | 02.02.2022 |
| 3. | கிராமிய சேவைத் திட்டம் நிறைவுநாள் | 16.07.2022 |
| 4. | கிராமிய சேவைத் திட்டம் காலம் | **5** மாதங்கள் |
| 5. | மண்டலம் | கும்பகோணம் மண்டலம் |
| 6. | அறக்கட்டளை | திருத்துறைபூண்டி |
| 7. | கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை | ஆண்:*142* பெண்:*158* மொ:*300* |
| 8. | பள்ளியின் பெயர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மற்றும் மேல் நிலை பள்ளி |
| 9. | 14 வயதிற்கு கீழ் உடற்பயிற்சி பயின்றவர்கள் | ஆண்:*44* பெண்:*55* மொ: *99* |
| 10. | கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்கள் | ஆண்:*109* பெண்:*189* மொ:*298* |
| 11. | காயகல்ப பயிற்சி கற்றவர்கள் எண்ணிக்கை | ஆண்:*90* பெண்:*150* மொ:*240* |
| 12. | தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை | ஆண்:87 பெண்:153 மொ:240 |
| 13. | முதல் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:69 பெண்:127 மொ:196 |
| 14. | இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:-62 பெண்:113 மொ:175 |
| 15. | மூன்றாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:59 பெண்:116 மொ:175 |
| 16. | பிரம்மஞானம் பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:17 பெண்:41 மொ: 58 |

## 2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை, எளிய மக்களும் ஆன்மிக அறிவைப்பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெறமுடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை SKY யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.

மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் பத்மஸ்ரீ.அருள்நிதி.**SKM.**மயிலானந்தன் அவர்களால் 227 -வது கிராமமாக தில்லைவிளாகம் கிராமத்தில் கிராமிய சேவைத்திட்டம் துவங்கப்பட்டது.

இக்கிராமத்தில் 02.02.2022–ஆம் தேதியிலிருந்து 16.07.2022-ஆம் நாள் வரை மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பலசிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.

## 3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- நோயற்றவாழ்வு
- குடும்பஅமைதி
- முதியோரைபாதுகாத்தல்
- கல்வியில்மேன்மை
- சுற்றுப்புறசுகாதாரம்
- சமுதாயவிழிப்புணர்வு
- மதநல்லிணக்கம்
- மனிதநேயம்

**ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்**

## 4. தொடக்க விழா அழைப்பிதழ்


வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

**நிகழ்ச்சி நிரல்**

மாலை

5.30 மணி : கொடியேற்றம் மற்றும் மரக்கன்றுகள் நடுதல்

5.45 மணி : இறைவணக்கம், குரு வணக்கம், தவம்

6.00 மணி : வரவேற்புரை : அருள்நிதி.**V.பெரியசாமி** அவர்கள்,
தலைவர், WCSC-கும்பகோணம் மண்டலம்.

முன்னிலை வகிப்பவர்கள் :

அருள்நிதி.**அருணா. மாணிக்கவாசகம்** அவர்கள்,
(திட்ட நன்கொடையாளர்), தில்லைவிளாகம்/காரைக்குடி (கேம்ப் : குவைத்)

பேரா.**G.பாலமுருகன்** அவர்கள், இணை இயக்குனர், WCSC-VSP.

முதுநிலை பேரா.**K.சரவணன்** அவர்கள்,
செயலாளர், WCSC-கும்பகோணம் மண்டலம்.

அருள்நிதி.**S.முத்து** அவர்கள்,
துணைத்தலைவர் (VSP), WCSC-கும்பகோணம் மண்டலம்.

அருள்நிதி.**S.தில்லையம்மாள்** அவர்கள்,
துணைத்தலைவர் (VSP), திருத்துறைப்பூண்டி MVKM அறக்கட்டளை.

6.05 மணி : விருந்தினரை கௌரவித்தல் மற்றும் மரக்கன்றுகள் வழங்குதல்

6.10 மணி : திட்ட அறிமுகவுரை : அருள்நிதி.**P.முருகானந்தம்** அவர்கள்,
இயக்குனர், WCSC-VSP.

6.20 மணி : தலைமையுரை : திரு.**P.காசிநாதன்** அவர்கள்,
ஊராட்சி மன்றத் தலைவர், தில்லைவிளாகம்.

6.25 மணி : தலைவரை பற்றிய அறிமுகம்

6.30 மணி : திட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரை (காணொலி காட்சி) :
அருள்நிதி.**SKM.மயிலானந்தன்** அவர்கள்,
சமூக சேவைக்காக பத்மஸ்ரீ விருது பெற்றவர்,
தலைவர், உலக சமுதாய சேவா சங்கம்.

6.40 மணி : கிராமியக் கலை நிகழ்ச்சி
**அருமைக் கலைக்காரியாலயம்** குழுவினர், திருச்சி.

7.40 மணி : நன்றியுரை : அருள்நிதி. **SATS.சுதந்திரமணி** அவர்கள்,
நிர்வாக அறங்காவலர்,
திருத்துறைப்பூண்டி மனவளக்கலை மன்ற அறக்கட்டளை.

உலக நல வாழ்த்து

## 5. தில்லைவிளாகம் கிராமத்தின் தொடக்கவிழா

அருள்நிதி. அருணா மாணிக்கவாசகம் அவர்களின் நிதி உதவியுடன், கும்பகோணம் மண்டலம், திருத்துறைபூண்டி மனவளக்கலை மன்ற அறக்கட்டளை, 02.02.2022ஆம் தேதி உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன் அவர்களால் (காணொளி காட்சி) மூலமாக உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன் மரம் நடுதல் விழாவுடனும் **தில்லைவிளாகம்** கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.














**<u>உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி</u>**











## 6. மருத்துவ முகாம்

05.04.2022 and 07.04.2022 அன்று அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மூலமாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் 174 அன்பர்கள் கலந்துகொண்டனர்.





## 7. மனநல ஆலோசனை முகாம்

*15.05.2022* அன்று பேரா. சிவராமன் அவர்களால் மன நல ஆலோசனை முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் மொத்தம் 45 அன்பர்கள் கலந்துகொண்டனர்.





## 8. மரக்கன்று வழங்குதல் சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்

27.04.2022 அன்று **பேரா. முத்து மற்றும் பேரா. மாணிக்கம்** அவர்களால் *100* மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. இம்முகாமில் மொத்தம் *100* அன்பர்கள் கலந்துகொண்டனர் மற்றும் பிரம்மஞானம் வகுப்பிற்கு தில்லைவிளாகம் கிராமத்திலிருந்து 58 அன்பர்கள் கலந்துகொண்டனர்.





## 9. சர்வதேச யோகா தினம்

*21.06.2022* அன்று தில்லைவிளாகம் கிராமத்தில் சர்வதேச யோகா தினம் நடைபெற்றது. இதில் பள்ளி மாணவர்கள் மற்றும் கிராம அன்பார்கள் மொத்தம் *85* நபர்கள் கலந்து கொண்டனர்.





## 10.அனுபவ உரை

| Village Name | | Thillaivilagam | | Name of the Professors | A/N. N. Jayapal | Date of Start | 02-02-2022 | | 99.25% | Maximum | No. of Responses | 32 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sponsor Name | | Mrs. Aruna Manikavasagam | | | Asst. Prof. V. Sasikala | Date of Closing | 16-07-2022 | | 25.00% | Minimum | | |
| **Sl No.** | **Feedback Questions** | **Average Performance** | **S.selvarani** | **Malathi** | **Seethalaksmi** | **Nalini** | **Muthulakshmi** | **Swaminathan** | **A.Nandhini** | **R.vairakkannu** | **R.Thangathurai** | **R.Ayyathurai** |
| | | | **F** | **F** | **F** | **F** | **F** | **M** | **F** | **M** | **M** | **M** |
| 1 | To what extent the physical exercises are helpful and effective to you? | 3.97 | 4 | 4 | 4 | 4 | 4 | 3 | 4 | 4 | 4 | 4 |
| 2 | To what extent your physical health has improved due to physical exercises? | 2.77 | 3 | 3 | 3 | 3 | 2 | 2 | 3 | 3 | 3 | 3 |
| 3 | How clean is your village now compared to before the village was adopted? | 2.72 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 | 2 | 2 | 3 | 3 |
| 4 | Were you able to completely control your addiction to tobacco/ alcohol/ drug? | 1.19 | 1 | 1 | 1 | 1 | 1 | 4 | 1 | 4 | 1 | 1 |
| 5 | Are you good in studies? | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| 6 | Are you able to remember things? | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | Are you able to focus on studies and other activities (School/College)? | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| 8 | How much of control have you gained on your anger? | 3.63 | 4 | 3 | 4 | 4 | 3 | 3 | 4 | 4 | 3 | 4 |
| 9 | To what extent your Mental health has calmed due to SKY Meditation? | 3.81 | 4 | 4 | 4 | 4 | 3 | 3 | 4 | 4 | 4 | 4 |
| 10 | What are your levels of tolerance to accept others behavior and maintain cordial relationship? | 3.53 | 4 | 4 | 3 | 4 | 4 | 3 | 4 | 4 | 3 | 3 |
| 11 | To what extent are you able to adjust with your family and friends? | 3.75 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |
| 12 | How much are you able to sacrifice to take the relationship forward? | 2.16 | 3 | 2 | 3 | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |
| 13 | To what extent are you able to eradicate your worries to maintain a healthy life? | 3.56 | 2 | 3 | 4 | 4 | 4 | 3 | 4 | 3 | 4 | 3 |
| 14 | How much are you able to moralize your desires to be contented? | 3.41 | 4 | 3 | 4 | 4 | 3 | 3 | 3 | 3 | 4 | 4 |
| 15 | How satisfied are you with the change in your children's attitude? | 2.31 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 1 | 3 | 3 | 3 |
| 16 | How satisfied are you with the change in your children's focus towards education? | 2.13 | 2 | 2 | 2 | 3 | 3 | 3 | 1 | 2 | 3 | 3 |
| 17 | How satisfied are you with the tailoring skills developed? | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| 18 | How satisfied are you with the earnings / income through tailoring? | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| 19 | Health Improvements Resolved | | Blood Pressure | Joint Pain | Sugar Control/ | Menstrual problems/ PCOD; Blood Pressure (BP) | Joint Pain /மூட்டு வலி, Over-weight / Obesity; | Joint Pain | Menstrual problems/ PCOD; | Ulcer | Joint Pain /மூட்டு வலி, Ulcer | Blood Pressure (BP) (BP), Heart Disease / Stroke; |

## Result Inference

| S.No. | Inference |
|---|---|
| 1 | 100% of the participants are able to remember things |
| 2 | 99% of the participants are benefitted with the exercises and leading a healthy life |
| 3 | 95% of the participants mental health has improved due to the SKY Meditation |
| 4 | 93% of the participants are able to adjust with their family and friends |
| 5 | 92% of the participants have improved their physical health through SKY practices |
| 6 | 216(71%) of the participants are have made progress in family peace |
| 7 | Due to SKY Exercise and Meditation- 188 participants are cured of Joint Pain,38 Women participants are cured of Menstrual Problem, 38 participants are cured of Ulcer, Blood Pressure, 38 participants are cured of Sugar Problem |
| 8 | 99% of the participants are happy with the VSP Programme. |



வாழ்க வளமுடன்.

எனது பெயர் நளினி, எனது
வசிப்பிடம் தில்லைவிளாகம். [illegible]
மனவளக்கலை யோக மூலமாக மிகவும் நான்
பயனடைந்து உள்ளேன். எனக்கு கடந்த 8 வருடமாக
உயர் இரத்த அழுத்தம் இருந்து வந்தது.
மனவளக்கலை யோக மூலமாக 5 மாதங்கள்
பயிற்சி எடுத்ததன் பயனாக இரத்த
அழுத்தம் சீரான நிலையில் உள்ளது.
முன்பு போல படபடப்பு, அதிகம் கோபப்படுதல்
போன்ற பிரச்சனைகள் குறைந்து உள்ளது.
மனவள கலை யோக மூலம் பயிற்சி மற்றும்
தியானம் செய்வதால் மனதில் அமைதி
நிலவுகிறது. மேலும் அடுத்தவருக்கு ஏற்படும்
பிரச்சனைகளை கண்டு மனம் தானாகவே
அருட்காப்பு போட்டு பிரச்சனைகளை சரி செய்ய
முடிகிறது. சாலையில் ஏதேனும் விபத்துக்கள்
... கண்டும் காணாமல்

செய்வதன் பலனாக விபத்தில் சிக்கியவர்
குணமடைய என் மனம் தானாகவே
பிரார்த்தனை செய்து கொள்கிறது. மனவள
கலை யோக பயிற்சி செய்வதன்
பலனாக உடல் சோர்வின்றி எப்போதும்
சுரு சுருப்புடன் இருக்க முடிகிறது.
தொடர்ந்து பயிற்சி, தியானம் போன்றவற்றை
தவறாமல் செய்து வாழ்வில் வெற்றி அடைவேன்.

வாழ்க வையகம்

வாழ்க வையகம்

வாழ்க வளமுடன்.

2



என் பெயர் பிரியா. நான் தில்லைவிளாகம் கிராமத்தில், கிராமிய சேவை திட்டத்தின் கீழ் செயல்படும் மனவளக்கலை மன்றத்தில் பயிற்சி பெற்று வருகிறேன். இதன் மூலம் எனக்கு உடல் நலமும், மனவளமும் சிறப்படைந்துள்ளது.

நான் ஒரு இல்லத்தரசி, குடும்ப வேலைகளை பார்ப்பதோடு சரி. எனது ஆரோக்கியத்திற்காக எந்த ஒரு முயற்சியையும் எடுக்கவில்லை. எனக்காக ஒரு நேரமும் ஒதுக்கி கொள்ளவில்லை. ஒரு சில உடல் நல பிரச்சனைகளும், மனச்சோர்வு, தாழ்வு மனப்பான்மை போன்ற மன நல பிரச்சனைகளுடன் வாழ்ந்திருந்தேன்.

இந்த சமயத்தில் யோகா வகுப்பு நடத்துகிறார்கள் என தெரிந்து, அங்கு சென்று பயிற்சிகளை முறையாக கற்றுக்கொண்டேன். உடலுக்கு பயிற்சிகளும், மனதிற்கு அகத்தாய்வு, தவம் போன்ற பயிற்சிகளும் அளித்தார்கள். இதை தொடர்ந்து செய்ய செய்ய ஒரு மாற்றம் ஏற்பட்டதை உணர்ந்தேன். சிந்தனை திறனும், செயலில்

கைகால் பயிற்சிகளும், கண் பயிற்சியும்,
முத்திரைகளும், ஆசனங்களும், அழுத்தபுள்ளிகளையும்
அறிந்து கபாலபதி, நாடிசுத்தி போன்ற மூச்சுப்
பயிற்சிகளும், உடலை தளர்த்துதல் போன்ற ஓய்வு
பயிற்சிகளும் மிகவும் சிறப்பானது.

இவை அனைத்தும் தொகுத்து ஒரு
அருட்பிரசாதம் போல் தந்த மகரிஷியின்
பொற்பாதங்களை தொட்டு வணங்குகிறேன்.
இவை அனைத்தும் கடைகோடியில் இருக்கும்
ஒரு சாமானியனுக்கும் கிடைக்க செய்த
உலக சமுதாய சேவா சங்கத்திற்கும்,
கிராமிய சேவா திட்டத்திற்கும் எனது
வாழ்த்துக்களையும், வணக்கங்களையும்
தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க வையகம்! வாழ்க வையகம்!!

வாழ்க வளமுடன்!!!



வாழ்க வளமுடன்

எனது பெயர் நந்தினி. நான்
தில்லை நகரத்தில் வசித்து வருகிறேன். நான்
கடந்த 5 மாதங்களாக இலவச மனவளக்கலை
யோக பயிற்சி பெற்று வருகிறேன். இதன்
பயனாக எனக்கு மனவளம், உடல் வளம்
பெருகி உள்ளது. எனக்கு கடந்த 6 வருடங்களாக
PCOD பிரச்சனை மாத விடாய் பிரச்சனை
இருந்து வருகிறது. இதனால் எனக்கு உடல்
எடையும் அதிகரித்து வருகிறது. விட்டது.
மனவளக்கலை யோக மூலமாக உடற்பயிற்சி
மற்றும் தியானம் செய்ததன் பலனாக
எனக்கு நீர்கட்டி பிரச்சனை சரியாகி
விட்டது. உடல் எடையும் 7 கிலோ குறைந்து
உள்ளது. மாதவிடாயும் சீராக வர ஆரம்பித்துள்ளது.
முக்கியமாக நான் பெரிதாக வித்தியாசத்தை
[illegible]. எனது

தந்தைக்கு 1 வருடத்திற்கு முன்பு வாதம்
வந்து அதனால் பெரிய பாதிப்பு வந்து
விட்டது. அவரால் அவரது சொந்த வேலைகளை
கூட செய்ய முடிய வில்லை. அவருக்கு ஆடைகளை
போட்டு விடுவதற்கு கூட அடுத்தவரின் உதவியை
எதிர் பார்க்கும் நிலைமை வந்து விட்டது. அவர்
எப்பொழுதும் சிரித்து பேசிக்கொண்டே இருக்கும்
தன்மை உடையவர். ஆனால் இந்த வாதப்
பாதிப்பிற்கு பிறகு அமைதியாக யாருடனும்
பேசாமல் எப்போதும் சோகமாக இருந்தார்.
இந்த மனவளக்கலை யோகா பயின்ற பிறகு
அவரது வேலைகளை அவரே செய்ய
ஆரம்பித்து விட்டார். அவரது ஆடைகளை
அவரே போட்டுக்கொள்ள ஆரம்பித்து விட்டார்.
இப்போது கை அவருக்கு நல்ல முன்னேற்றம்
அடைந்து உள்ளது. மனவளக்கலை யோகா
மூலமாக தியானம் செய்ய செய்ய மனவளத்தி
-லும் நல்ல முன்னேற்றம் தெரிகின்றது

பல மாற்றங்களை நான் கண்டேன்.
அவருக்கு கோபமும் குறைந்து உள்ளது.
மனவளக்கலை யோகாவை அனைவரும்
பயின்று எங்களைப் போல எல்லோரும்
பயன் பெற விரும்புகிறேன்.

வாழ்க வையகம்.
வாழ்க வளமுடன்

உ

5

## 11. நிறைவு விழா நிகழ்ச்சி நிரல்

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

### நிகழ்ச்சி நிரல்

மாலை

5.30 மணி : கொடியேற்றம், ஆரோக்கியமான அமைதி கிராமம் போர்டு திறப்பு.

5.45 மணி : இறைவணக்கம், குரு வணக்கம், தவம்

6.00 மணி : வரவேற்புரை : அருள்நிதி. **S.முத்து** அவர்கள்,
தலைவர், WCSC-கும்பகோணம் மண்டலம்.
இணை இயக்குனர், WCSC-VSP.
முன்னிலை வகிப்பவர்கள் :
அருள்நிதி. **P. சுப்ரமணியன்** அவர்கள்,
முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், தில்லைவிளாகம்.
அருள்நிதி. **P. காசிநாதன்** அவர்கள்,
ஊராட்சி மன்றத் தலைவர், தில்லைவிளாகம்.
திரு. **Rtn.MPHF. கோவி.ரெங்கசாமி** அவர்கள்,
துணை ஆளுநர், (ரோட்டரி சங்கம் முத்துப்பேட்டை), தில்லைவிளாகம்.
பேரா.**G.பாலமுருகன்** அவர்கள், இணை இயக்குனர், WCSC-VSP.
பேரா. **மா. சிவராமன்** அவர்கள்,
செயலாளர், WCSC-கும்பகோணம் மண்டலம்.
பேரா. **P. தில்லையம்மாள்** அவர்கள்,
துணைத்தலைவர் VSP, திருத்துறைப்பூண்டி ம.வ.க.மன்ற அறக்கட்டளை.

6.05 மணி : விருந்தினரை கௌரவித்தல்

6.10 மணி : செயல்பாட்டு உரை : அருள்நிதி. **P. முருகானந்தம்** அவர்கள்,
இயக்குனர், WCSC-VSP.

6.20 மணி : தலைமையுரை :
திரு. **Rtn. MPHF. C.கிருஷ்ணமூர்த்தி** அவர்கள்,
சாசனத்தலைவர், (ரோட்டரி சங்கம் முத்துப்பேட்டை), தில்லைவிளாகம்.

6.30 மணி : தலைவரைப் பற்றிய அறிமுகம்

6.35 மணி : திட்டத்தை நிறைவு செய்து சிறப்புரை (காணொலி காட்சி)
அருள்நிதி. **SKM.மயிலானந்தன்** அவர்கள்,
சமூக சேவைக்காக பத்மஸ்ரீ விருது பெற்றவர்,
தலைவர், உலக சமுதாய சேவா சங்கம்.

6.45 மணி : **அனுபவ உரை படக்காட்சி**

6.55 மணி : **கிராமியக் கலை நிகழ்ச்சி**

7.15 மணி : நன்றியுரை : அருள்நிதி. **SATS.சுதந்திரமணி** அவர்கள்,
நிர்வாக அறங்காவலர், திருத்துறைப்பூண்டி ம.வ.க.மன்ற அறக்கட்டளை.

உலக நல வாழ்த்து

## 12. எதிர்காலத் திட்டங்கள்:

ஆரோக்கியமும், அமைதியும் மிக்க தில்லைவிளாகம் கிராமம், திருத்துறைபூண்டி மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.

## 13. வாழ்த்து:

தில்லைவிளாகம் கிராமத்தை அமைதிகிராமமாகவும், ஆரோக்கியகிராமமாகவும் மாறுவதற்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி.**SKM.**மயிலானந்தன் அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி வழங்கிய **அருள்நிதி. இளமுருகு (எ) சேகர் அவர்களுக்கும்**, இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்த கும்பகோணம் மண்டல பொறுப்பாளர்களுக்கும், திருத்துறைபூண்டி மனவளக்கலை மன்ற அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும்,, பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடத்திக்கொடுத்த மனவளக்கலை கிராம ஆசிரியர்கள் **து.பேரா.*N.*ஜெயபால் மற்றும் பேரா.*V.*சசிகலா** அவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவர்க்கும் உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத்திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

**உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை**
**உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.**
**உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே**
**உலக சமாதனம் என்ற அமைதி உண்டாம்.**

**-வேதாத்திரி மகரிஷி**

தொண்டாற்றி இன்பம் காண்போம்! நன்றி, வாழ்க வளமுடன்!

குருவின் சேவையில்
*WCSC-VSP* இயக்குனரகம்
அறிவுத்திருக்கோயில், ஆழியார்